MCOP.No. 393/2024

Date : 05.08.2026

Witness Name & Rank - சபரீஸ்வரன் - PW 2

**சாட்சி அழைக்கப்பட்டு 3 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டது**

1. விபத்து சமயத்தில் வாகனத்தை ஓட்டிச்சென்றது எனது தந்தை என்றால் சரிதான். விபத்தானது லாரியின் பின் பகுதியில் மோதியதால் ஏற்பட்டது என்றால் சரிதான். நானும் எனது தந்தையும் வாகனத்தில் சென்றபோது பேசிக்கொண்டு சென்றதால் லாரியை பின்புறமாக உரிய சமிக்கையுடன் நகர்த்தியபோதும் எனது தந்தையின் கவனக்குறைவால் தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை அதே போல் நாங்கள் சென்ற வாகனத்திற்கு உரிய காப்பீடு சான்று இல்லை எனவே தான் 3 வது எதிர்மனுதாரருக்கு எதிராக இந்த பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.
2. 28.05.2022 க்கு பிறகு நான் தொடர் சிகிச்சை எடுத்துக்கொண்டதாக எந்த மருத்துவ ஆவணமும் இல்லை எனவே எனக்கு ஏற்பட்ட காயம்பூரணகுணம் அடைந்துவிட்டது என்றால் சரியல்ல. எனக்கு அறுவை சிகிச்சை எதுவும் செய்யவில்லை எனவே எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றால் சரியல்ல. எனவே மருத்துவ பில் வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு நிரந்தர வருமானம் மற்றும் விபத்தால் வருமான இழப்போ, நிரந்தர ஊனமோ இல்லை என்றால் சரியல்ல. எனது தந்தையின் கவனக்குறைவால் விபத்து நிகழ்ந்துள்ளதால் 3 வது எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/-)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.